JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-8 Witness
for Prosecution

| CC.No. | 127/2024 | Crime No. | 253/2024 | Station | Appakodal |
|---|---|---|---|---|---|

| Name | **Pw-8- G.K.சந்திரசேகரன்** | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 25th day of February 2026 | | |

**1 ம் எதிரி ஆஜர், 2ம் எதிரி ஆஜர் இல்லை.**

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல்துறையில் பணிபுரிந்து, பணி ஓய்வு பெற்று தற்போதுகோபியில் வசித்து வருகிறேன். நான் கடந்த 18.09.2024 ஆம் தேதி, ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்தபோது ஆப்பக்கூடல் காவல் நிலைய முதல் நிலைக் காவலர் 3159 தினேஷ்குமார் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது கிருஷ்ணன், வயது 35, த/பெ.பெருமாள், 19 மெயின் வீதி, தோட்டக்கொடியான்பாளையம், சிந்தகவுண்டன்பாளையம், மஞ்சள் வேம்பத்தி, அந்தியூர் தாலுக்கா என்பவரின் அசால்ட் இன்டிமேஷன் பேரில் ஈரோடு அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை சென்று சிகிச்சையில் இருந்த கிருஷ்ணன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து, நிலையம் வந்து ஆப்பக்கூடல் காவல் நிலைய குற்ற எண்.253/2024, சட்டப்பிரிவுகள் 296(b), 115(2), 351(3) BNS பிரிவுகளின் கீழ் 18.09.2024ஆம் தேதி, காலை 06.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **இன்டிமேஷன் அ.சா..ஆ.5 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை அசல் மற்றும் வாதியின் புகார் வாக்குமூலம் மற்றும் இன்டிமேசன் ஆகிவற்றறை இனைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1, பவானி அவர்களுக்குஅனுப்பி வைத்தும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை புலன்விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்ததை எடுத்துக் கொண்ட நான் 18/09/2024 ஆம் தேதி, காலை 07:30 மணிக்கு, சம்பவயிடம் சென்று சாட்சிகள் மூர்த்தி மற்றும் சக்திவேல் ஆகியோர்கள்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.25 06:52:19 +0530

முன்னிலையில் சம்பவயிடத்தினை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் காலை 08:30 மணிக்கு எதிரிகள் குற்ற செயலுக்கு பயன்படுத்திய 93 சென்டிமீட்டர் நீளமும், 12 சென்டிமீட்டர் சுற்றளவும் கொண்ட உருட்டு மரக்கட்டை தடி ஒன்று, அடிப்பகுதி ஒழுங்கற்ற நிலையில் உள்ளதை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேன். பின்னர் சாட்சிகள் கிருஷ்ணன் சொக்கன், சாந்தி, சின்னதுரை, மூர்த்தி மற்றும் சக்திவேல் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

சாட்சிகளை விசாரித்ததிலிருந்தும், வழக்கின் சம்பவம் உண்மையான தெரியவந்த நிலையில் எதிரிகளை தேடி வந்த நிலையில் தோட்டக்குடியான்பாளையம், மெயின் வீதி, ஏரிக்கரை ஆகிய இடங்களில் தேடியும் அரசு ஆரம்ப பள்ளி அருகே வந்து நின்று கொண்டிருந்த எதிரிகளை சாட்சி சொக்கன் அடையாளம் காட்ட எதிரி தனசேகர் மற்றும் குப்புசாமி ஆகியோர்களை பிடித்து விசாரிக்க குற்றத்தை ஒப்பு கொண்டவரை காலை 11:30 மணிக்கு கைது செய்வதற்கான காரணத்தை கூறி கைது செய்து, தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்திற்கு படிவம் 91 தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் 30.09.2024 ஆம் தேதி கிருஷ்ணன் என்பவருக்கு சிகிச்சை அளித்த அந்தியூர் அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் சக்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுன் கூடிய காய்ச்சான்றிதழ் பெற்று தாக்கல் செய்தேன். பின்னர் அன்றைய தினம் கிருஷ்ணன் என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று மருத்துவர் சான்று வழங்கியும், தனது வாக்குமூலத்தில் கூறியுள்ளதாலும், இவ்வழக்கின் சட்ட பிரிவை 296(b), 115(2), 351(3) BNS இருந்து 296(b) 115(2) 351(3), 117(1) BNS ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து 30.09.2024–ம் தேதி எதிரிகள் தனசேகர் மற்றும் குப்புசாமி ஆகியோர்கள் மீது 296(b) 115(2) 351(3), 117(1) BNS ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமானது கிழ மேல் கான்கிரீட் வீதி என்றால், சரிதான். நான் தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் சம்பவயிடத்தில் சாக்கடை இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால், சரிதான். ஆனால் சாக்கடைக்கான பாதை இருந்தது. நான் சொல்வது தவறு என்றாலும், தற்போது

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.25 06:52:27 +0530

வழக்கிற்காக சம்பவயிடத்திற்காக சாக்கடை உள்ளது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனது விசாரணையில் சாட்சி மூர்த்தி மற்றும் சக்திவேல் ஆகியோர் சம்பவத்தை கேள்விபட்டு தான் சம்பவயிடத்திற்கு வந்ததாகத்தான் கூறியுள்ளார்கள் என்றால், சரிதான். சத்தம் கேட்டு தான் சம்பவயிடத்திற்கு வருகிறார்கள்.

கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கட்டையை யார் அடையாளம் காட்டினார்கள் என்று எனது விசாரணையில் நான் கூறவில்லை என்றால், சாட்சி சொக்கன் அடையாளம் காட்டியுள்ளார். ஆனால் சொக்கனை நான் விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால், சரியல்ல. பதிவு செய்தனர். ஆனால் சொக்கன் தான் அடையாளம் காட்டினார் என்பதை எனது விசாரணையில் அவர் கூறவில்லை என்றால், சரிதான். இந்த வழக்கு சம்பவம் நடப்பதற்கு 15 நாட்களுக்கு முன்பு எதிரிகள், வாதியிடம் தகராறு செய்தது குறித்து எவ்வித புகாரும் எனக்கு வரவில்லை என்றால், சரிதான்.

சம்பவ தினத்தன்று அங்கு முத்து என்பவரின் நாய் இந்த வழக்கின் வாதி கிருஷ்ணனை கடிக்க வந்ததாக எனது விசாரணையின்போது கூறவில்லை என்றால், சரிதான். சம்பவ தினத்தன்று வாதி கிருஷ்ணன் மது போதையில் இருந்தார் என மருத்துவர் சான்றிதழ் வழங்கினார் என்றால், அதைப் பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது தவறு என்றாலும், நான் தாக்கல் செய்த விபத்து பதிவேட்டில் வாதி கிருஷ்ணன் மது போதையில் தான் இருந்தார் என சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். வாதி கிருஷ்ணன் எனது விசாரணையின்போது வெட்டி கொன்று விடுவேன் என எதுவும் கூறவில்லை என்றால், கட்டையைக் காட்டி அடித்து கொன்று விடுவேன் என்று தான் கூறியுள்ளார்.

நான் முதல் விசாரணையில் சொல்வது போல். சொன்ன நேரத்தில். சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதிக்கு 15 நாட்களுக்கு முன்பு புகார்தாரர்களுக்கும். எதிரிகளுக்கும் வாய் தகராறு ஏற்பட்டது என்றாலும், அதனை மனதில் வைத்துக் கொண்டு புகார் எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து புகார்தாரர் தானாகவே மது போதையில் கீழே விழுந்து காயத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றாலும், நான் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால், சரியல்ல. நான் வழக்கை முறையாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court

readover to the witness in the presence

of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.25 06:52:34 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani